DFCC BANK
Keep Growing

# வீடமைப்புக் கடன்கள்
# முக்கிய தகவல்கள் ஆவணம்

2019

**உள்ளடக்கம்**


1. அறிமுகம்
2. வீடமைப்புக் கடன் வகைகள்
3. தகுதி
4. கடனின் பெறுமதி
5. மீளளிப்பு
6. தொடர்மாடிகளுக்கான வீட்டுக் கடன்கள்
7. சிறப்பு அம்சங்கள்
8. வட்டி வீதம்
9. கட்டணங்கள் மற்றும் ஏனைய அறவீடுகள்
10. விண்ணப்பிக்கும் முறை
11. எம்முடன் தொடர்புகொள்ளும் முறை


**01. அறிமுகம்**

வசிப்பிட நோக்கங்களுக்காக நிதி வசதி தேவைப்படும் வாடிக்கையாளர்களுக்கென நுகர்வு வங்கிச் சேவைப் பிரிவினால் வீடமைப்புக் கடன்கள் வழங்கப்படுகின்றன.

**02. பின்வரும் நோக்கங்களுக்காக வீட்டுக் கடன்களைப் பெற முடியும்**

I. வீடொன்றை வாங்குவதற்கு, கட்டுவதற்கு அல்லது உங்கள் வீட்டைப் புனரமைப்பதற்கு
II. உங்களுக்கென ஒரு காணியை வாங்குவதற்கு.
III. தொடர்மாடித் தொகுதியில் சொத்தொன்றை வாங்குவதற்கு.
IV. தற்போதய வீட்டைப் பூர்த்தி செய்வதற்கு அல்லது விரிவுபடுத்துவதற்கு.
V. வீட்டில் முன்னேற்றங்களைச் செய்வதற்கு (உதா: சோலார் பனெல் பொருத்துதல்).

**03. தகுதி**

வீடமைப்புக் கடனுக்கான தகுதியைப் பெறுவதற்கு ஒரு நபர் இ.ரூ.30,000 அல்லது அதற்கு மேற்பட்ட கிரமமான மாதாந்த வருமானத்தைச் சம்பாதிக்க வேண்டும். கடனின் மாதாந்த தவணை மீளளிப்பைச் செலுத்தவும் வாழ்க்கைச் செலவுகளை ஈடுசெய்யவும் இந்த வருமானம் போதியதாக இருக்க வேண்டும்.

**04. கடனின் பெறுமதி**

வாடிக்கையாளரின் மீளளிப்பு ஆற்றல், சம்பந்தப்பட்ட சொத்து தொடர்பில் வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட கட்டாய விற்பனைப் பெறுமதி (FSV) என்பவற்றைக் கருத்திற்கு எடுத்துக்கொண்டே கடனின் அதிகபட்ச தொகை தீர்மானிக்கப்படும்.

வீடு ஒன்றைக் கட்டுவதாக இருந்தால், தொகை மதிப்பீட்டு பட்டியல் (BOQ) பெறுமதியில் ஆகக்கூடியதாக 75 சதவீதம் வரையான தொகையைக் கடனாகப் பெற வங்கி இடமளிக்கும்.

**05. மீளளிப்பு**

நீங்கள் வேலையிலிருந்து ஓய்வு பெறும் வயதைப் பொறுத்து (அதிகபட்ச வயது 60) ஆகக்கூடியதாக 20 ஆண்டுகள் வரையான காலத்தில் வீடமைப்புக் கடன்களை மீளளிக்க முடியும். இரண்டு மீளளிப்பு வழிமுறைகளை நாம் வழங்குகின்றோம்:

**சமப்படுத்திய மாதாந்தத் தவணைகள்:** கடன் மீளளிப்பும் வட்டியும் ஒரு நிலையான தொகையாக இருக்கும்.
**சமமான மாதாந்தத் தவணைகள்:** கடன் தொகை சமமான தவணைகளில் மீளளிக்கப்படும் அதே வேளையில், வட்டியானது குறைந்துசெல்லும் மீதியின் அடிப்படையில் கணிக்கப்படும்.
தவணைத் தொகைக் கணிப்பீட்டுக்கு, www.dfcc.lk என்ற எமது வலைத்தளத்தைப் பார்க்கவும்.

**06. தொடர்மாடிகளுக்கான வீட்டுக் கடன்கள்**

வசிப்பிடம் உன்ற வகையில் அல்லது முதலீடு என்ற வகையில், தொடர்மாடி வீடு ஒன்றைப் பெற்றுக்கொள்ள DFCC உங்களுக்கு உதவும். நீங்கள் அப்பார்ட்மன்ற் ஒன்றை வாங்கும்போது உங்களுக்கு மிகச் சிறந்த சேவைகளை வழங்குவதற்காக DFCC வங்கி நாட்டிலுள்ள பிரபல வீடமைப்பு அபிவிருத்தி நிறுவனங்களுடன் பங்காளித்துவத்தை ஏற்படுத்தியுள்ளது. உங்கள் முதலீட்டில் இருந்து நீங்கள் அதிகபட்ச நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு இடமளிக்கும் வகையில் தெரிவு செய்யப்பட்ட தொடர்மாடி வீட்டு வேலைத்திட்டங்களுக்கென விசேட வீட்டுக் கடன் திட்டங்கள் எம்மிடம் உள்ளன.

**07. சிறப்பு அம்சங்கள்**

I. உங்கள் பணப் புழக்க முறைக்கு உகந்த நெகிழ்வான அல்லது நிலையான வட்டி வீதத்தைத் தெரிவு செய்யும் வாய்ப்பு உங்களுக்கு வழங்கப்படும்.

II. முன்பே அங்கீகரிக்கப்பட்ட வீடமைப்புக் கடனை 2 வேலை நாட்களில் பெறலாம். நிதி ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்று அறிந்திருப்பதால், நீங்கள் உங்களது முதலீடு தொடர்பாக நம்பிக்கையுடன் தீர்மானம் எடுப்பதற்கு இந்த வீடமைப்புக் கடன் இடமளிக்கும். உங்கள் வருமான விபரங்கள் மட்டுமே எமக்குத் தேவை. உங்கள் தெரிவு பூர்த்தி செய்யப்பட்டதும் சொத்தின் மீதான அடைமானம் செயற்படுத்தப்பட்டுக் கடன் தொகை கையளிக்கப்படும்.

III. எமது சகல கிளைகளிலுமுள்ள நன்கு தேர்ச்சி பெற்ற அலுவலர்கள் இந்த நடைமுறைகள் அனைத்திலும் உங்களுக்கு வழிகாட்டுதலும் உதவியும் வழங்குவார்கள். ஆரம்பக் கட்டத்திலேயே உங்களுக்குத் தேவையான சகல தகவல்களும் வழங்கப்படும் என்பதால், உங்கள் பெறுமதியான நேரத்தை மீதப்படுத்த முடியும்.

IV. எமது வாசலடி வங்கிச் சேவையின் நன்மைகளையும் நீங்கள் அனுபவிக்க முடியும். எமது வலைத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்புகொள்ளுங்கள். வங்கியின் பிரதிநிதி ஒருவர் உங்களுக்கு வசதியான நேரத்தில் உங்கள் வீட்டிற்கு அல்லது அலுவலகத்திற்கு அனுப்பப்படுவார்.

**08. வட்டி வீதம்**

ஏற்புடைய வட்டி வீதங்களை www.dfcc.lk என்ற எமது வலைத்தளத்தில் பார்க்கலாம்.

**09. கட்டணங்கள் மற்றும் ஏனைய அறவீடுகள்**

ஏற்புடைய கட்டணங்கள் மற்றும் ஏனைய அறவீடுகளை www.dfcc.lk என்ற எமது வலைத்தளத்தில் பார்க்கலாம்.

**10. விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்து, நிரப்பி DFCC கிளை ஒன்றில் சமர்ப்பியுங்கள் அல்லது www.dfcc.lk என்ற எமது வலைத்தளத்தில் கிடைக்கும் விசாரணைப் படிவத்தை நிரப்புங்கள்.

வீடமைப்புக் கடனுக்குத் தேவையான ஆவணங்கள் எவையென்பதையும் எமது வலைத்தளத்தில் பார்க்கலாம்.

கடனுக்கு விண்ணப்பிப்பதற்காக நீங்கள் விரும்பும் கிளை ஒன்றிற்கும் செல்லலாம்.

**11. எம்முடன் தொடர்புகொள்ளும் முறை**

+94(11)2350000 என்ற எமது 24 மணிநேர தொடர்பு நிலைய தொலைபேசி இலக்கத்தினூடாக அல்லது info@dfccbank.com என்ற மின்னஞ்சல் மூலம் நீங்கள் எம்முடன் தொடர்புகொள்ளலாம். அல்லது எமது கிளை ஒன்றிற்கு நீங்கள் விஜயம் செய்யலாம். கிளைகளின் விபரங்களை எமது வலைத்தளத்தில் பாருங்கள்.

மேலதிக விபரங்களுக்கு எமது வீடமைப்புக் கடன் விசேட அலுவலர் துல்ஷினி ஜயதிலகவுடன் தொடர்புகொள்ளுங்கள். தொலைபேசி: 076 9680258.